[1972 நவம்பர் 13

Boat building yards

* 280 *Q.*—Thiru V. ISVARMURTI: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state the places where boat building yards have been located in this State district-wise?

படகு கட்டும் தளங்கள்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

இம்மாநிலத்தில் படகு கட்டும் தளங்கள் மாவட்ட வாரியாக எங்கெங்கு அமைக்கப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இம்மாநிலத்தில் மீனளத் துறையின் பொறுப்பில் படகு கட்டும் தளங்கள் நான்கு உள்ளன. அவற்றில் இரண்டு சென்னை மாநகரில் இராயபுரத்திலும், ஒன்று தஞ்சாவூர் மாவட்டம் நாகப்பட்டினத்திலும், ஒன்று இராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்திலும் உள்ளன. இவை தவிர, தனியாருக்குச் சொந்தமான படகு கட்டும் ஏழு தளங்கள் இம்மாநிலத்தில் உள்ளன.

Handloom Finance Corporation, Limited

* 281 *Q.*—Thiru V. ISVARMURTI: Will the Hon. the Minister for Industries be pleased to state the financial assistance, if any, given by the Handloom Finance Corporation Limited to—

1. Private Individuals;
2. Co-operatives; and
3. Firms, during 1969–70 and 1970–71?

கைத்தறி நிதிக் கழகம்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

கைத்தறி நிதிக் கழகம் 1969—70, 1970—71 ஆம் ஆண்டுகளில் (1) தனி நபர்கள் (2) கூட்டுறவுச் சங்கங்கள் (3) நிறுவனங்களுக்கு நிதியுதவி ஏதேனும் வழங்கியிருந்தால், அது குறித்த விவரம் யாது ?